DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, COONOOR

**Case No: CC.No.172/2023**
Prosecution witness- **PW.1**

| | | | |
|---|---|---|---|
| Name | : Purusothaman | Caste | : |
| Father Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |
| Time | : 12:40 P.M. to 01:00 P.M. | | |

**(Accused A1 to A4 absent. Petition U/s.355 of BNSS filed and allowed. Respective accused counsel present)**
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 14.10.2024

14.10.2024 முதல் விசாரணை

நான் சென்னை மறைமலை நகரில் குடியிருந்து ஸ்ரீபாரத் கேஸஸ் என்ற பெயரில் நானும் எனது நண்பர் ஜெகதீசனும் பங்குதாரர்களாக இருந்து மறைமலைநகரில் கேஸ் ஏஜென்சி வைத்து நடத்தி வருகிறோம்.

1) 2017ம் வருடம் 5 அல்லது 6வது மாதத்தில் மேற்படி எங்களது ஏஜென்சியை விரிவுபடுத்துவதற்காக ஹெச்.டி.எப்.சி வங்கி சேலையூர் கிளையில் அடமான கடனாக ரூ.5 கோடி கேட்டு விண்ணப்பம் செய்திருந்தோம். அதிலிருந்து சுமார் ஒருமாதம் கழித்து முரளி என்பவர் எனக்கு போன் செய்து தான் குன்னூர் சிவா பைனான்சின் மேலாளர் என்றும் தனது உரிமையாளர் பெயர் பாஸ்கர் என்றும் எனக்கு தேவைப்படும் கடன்தொகையினை குறைந்த வட்டிக்கு கொடுப்பதாகவும் கூறினார். எனக்கு பணம் தேவை என்பதை உங்களுக்கு எப்படி தெரியும் என்றும் எனது போன் நம்பர் உங்களுக்க எப்படி தெரியும் என்று நான் அவரை விசாரித்தபோது வங்கி மூலமாக அதை தெரிந்துகொண்டதாக கூறினார்.

2) மேலும் நான் குன்னூர் வந்தால் அவரது உரிமையாளர் பாஸ்கரை எனக்கு அறிமுகம் செய்து வைப்பதாக கூறினார். அதன்பேரில் 16.09.2017ம் தேதி நானும் எனது பங்குதாரர் ஜெகதீசன் எனது ஓட்டுநர் விஜயகுமார் ஆகியோர் குன்னூர் வெலிங்டனுக்கு வந்து மேற்படி 2ம் எதிரி முரளியை சந்தித்தோம். அவர் எங்களுக்கு முன்பாக ஒரு காரில் சென்றார். அவரை பின்தொடர்ந்து நாங்களும சென்றோம். சுமார் 3 கிமீ தள்ளி ஒரு எஸ்டேட்டுக்கு கூட்டிச்சென்றார். அங்கு தனது உரிமையாளர் என்று சொல்லி 1ம் எதிரி பாஸ்கரனை எனக்கு அறிமுகம் செய்து வைத்தார். மேற்படி முரளி மற்றும் பாஸ்கர் ஆகியோர்களை தற்போது பார்த்தாலும் என்னால் அடையாளம் காட்டமுடியும். (**1, 2 எதிரிகள் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகாததால் சாட்சியால் அடையாளம் காட்ட முடியவில்லை.**)

3) அப்போது 1ம் எதிரி உங்களுக்கு எவ்வளவு பணம் தேவைப்படுகிறது என்று கேட்டார். எனது தொழில் வளர்ச்சிக்காக ரூ.5 கோடி கடன் வேண்டுமென்று சொன்னேன். அந்த கடன் தொகைக்கு ரூ.10 லட்சம் பிராசஸிங் பீஸ் வரும் என்றும் அந்த தொகையை ரொக்கமாக ரெடி செய்தால் தான் கடன் தருவதாக சொன்னார். 10 நாட்களுக்குள்ளாக மேற்படி தொகையை தயார் செய்யுமாறு கூறினார். அதன்பிறகு நாங்கள் கிளம்பி சென்னை சென்றுவிட்டோம். சென்னை வந்தபிறகு இரண்டுநாள் கழித்து மேற்படி பாஸ்கரும் அவரது தம்பி என்று சொல்லி பாலகுமார் என்பவரும் அடிக்கடி போன் செய்து பணம் ரெடியாகிவிட்டால் வருமாறு கூறினார்கள்.

4) 26.09.2017ம் தேதி காலை 2ம் எதிரி முரளி எனக்கு போன் செய்து பணம் ரெடியாகிவிட்டதா என்று கேட்டார். நான் இன்று பணம் ரெடியாகிவிடும் என்று சொன்னேன். அன்றையதினம் பணத்தை தயார் செய்துவிட்டு மாலை சுமார் 05.00 மணியளவில் சென்னையிலிருந்து கிளம்பி மறுநாள் 27.09.2017ம் தேதி காலை குன்னூர் வந்து முரளிக்கு போன் செய்தோம். அவர் எங்களை குன்னூர் ரயில்நிலையத்தில் காத்திருக்குமாறும் காலை 09.00 மணிக்கு வந்து எங்களை கூட்டிச்செல்வதாகவும் சொன்னார். அன்று காலை 09.30 மணியளவில் 2ம் எதிரி முரளி

மற்றும் அவருடன் பாலகுமார் என்பவரும் ரயில்நிலையம் வந்து அவரது உரிமையாளரை பார்ப்பதற்காக எங்களை கூட்டிச்சென்றார்கள்.

5) இந்த முறை வேறொரு இடத்திற்கு எங்களை கூட்டிச்சென்றார்கள். அங்கு 1ம் எதிரி பாஸ்கர் இருந்தார். அவரிடம் நான் விசாரித்தபோது இதுவும் அவர்கள் இடம் தான் என்று சொன்னார்கள். மேலும் பாஸ்கர் எங்களிடம் பணம் ரெடி பண்ணிவிட்டீர்களா என்று கேட்டார். நான் பணம் தயாராக உள்ளது என்றும் எங்களுக்கான கடன்தொகையை எப்படி கொடுப்பீர்கள் என்று கேட்டேன். அவர் வெளியே லட்சுமிவிலாஸ் வங்கி என்று பெயர் எழுதியிருந்த ஏடிஎம் சென்டருக்கு பணம் நிரப்பும் வாகனத்திற்கு கூட்டிச்சென்று அதை திறந்து டிரேவில் பணம் இருந்ததை எங்களிடம் காட்டினார். மீண்டும் உள்ளே வந்து நான் தொகை ரூ.10 லட்சத்தை மேற்படி பாஸ்கரிடம் கொடுத்தேன்.

6) பின்னிட்டு எங்களிடம் முரளியை அனுப்புவதாகவும் லட்சுமிவிலாஸ் வங்கிக்கு சென்றவுடன் எங்களது வங்கி கணக்கிற்கு கடன்தொகையை மாற்றி கொடுப்பார்கள் என்றும் சொன்னார். அதன்பேரில் எங்களது காரிலேயே முரளியும் ஏறிக்கொண்டு குன்னூர் லட்சுமிவிலாஸ் வங்கியை நோக்கி சென்று கொண்டிருந்தோம். அப்போது புளுவேல் லாட்ஜ் முன்பாக வந்தபோது மேற்படி முரளி ஆடிட்டரைஅழைத்து வருவதாக சொல்லிவிட்டு எங்கள் காரிலிருந்து இறங்கி சென்றார். பின்னிட்டு சுமார் அரைமணிநேரம் நாங்கள் காத்திருந்தும் முரளி வரவில்லை. போன் செய்தால் அவரது எண் ஸ்விட்ச் ஆப் செய்யப்பட்டதாக வந்தது.

7) நாங்கள் காரிலிருந்து இறங்கி அக்கம்பக்கம் தேடினோம். முரளியை காணவில்லை என்றவுடன் எங்களை ஏமாற்றிவிட்டதை உணர்ந்தோம். பின்னிட்டு எங்கு வைத்து பணம் கொடுத்தோமோ அந்த இடத்திற்கே மீண்டும் சென்றோம். அங்கு சென்று விசாரித்தபோது மேற்படி பாஸ்கர் மற்றும் அவரது ஆட்கள் நான்குபேர் கெஸ்ட் ஆக தங்கியிருந்ததாக சொன்னார்கள். அந்த இடம் குறித்து விசாரித்தபோது அது அக்சயா கார்டன் என்று சொன்னார்கள். நாங்கள் சென்றபிறகு மேற்படி பாஸ்கரும் அங்கிருந்து சென்றுவிட்டதாக அங்கிருந்தவர்கள் சொன்னார்கள்.

8) பின்னிட்டு தான் மேற்படி பாஸ்கரன் மற்றும் எதிரிகள் எங்களை நம்பவைத்து தொகை ரூ.10 லட்சத்தை ஏமாற்றி பெற்றுக்கொண்டார்கள் என்பதை நாங்கள் தெரிந்துகொண்டோம். அக்கம்பக்கம் தேடி பார்த்துவிட்டு கொலக்கம்பை காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தோம். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் கண்டுள்ளது எனது கையொப்பம் தான். (**அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) என்னிடம் தொகையை வைத்து காட்டிய லட்சமிவிலாஸ் வங்கி என்று எழுதியிருந்த காரை தற்போது பார்த்தாலும் என்னால் அடையாளம் காட்டமுடியும். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் கண்டுள்ளது அந்த கார் தான். **(அந்த புகைப்படங்கள் அ.சா.ஆ.2 (3 வரிசை) ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

9) மேற்படி காருக்குள் பணம் வைத்திருந்த பெட்டியை பார்த்தால் எனக்கு அடையாளம் தெரியும். என்னிடம் காட்டப்படும் பெட்டி தான் அது. **(அந்த பெட்டி அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது) (டி.என்.66.எல்.2268 பதிவெண் கொண்ட சாவ்ரெலட் கார் ஒன்று அ.சா.பொ.2 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது)** அன்றையதினம் அந்த பெட்டியை திறந்து காட்டியபோது மேல்புறமாக 2000 ரூபாய் நோட்டுக்கட்டுகள் அடுக்கி வைக்கப்ட்டிருந்தது. தற்பொழுது வரை அந்த தொகை எனக்கு கிடைக்கவில்லை. போலிசார் வழக்கு சம்பந்தமாக என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை - **(வாய்ப்பளித்தும் இல்லை)**

/ஒப்பம்/R.அப்துல் சலாம்

நீதித்துறை நடுவர், குன்னூர்.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, COONOOR

**Case No: CC.No.172/2023**
Prosecution witness- **PW.2**

| | | | |
|---|---|---|---|
| Name | : Jegadeesan | Caste | : |
| Father Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |
| Time | : 02:35 P.M. to 02:55 P.M. | | |

**(Accused present. Respective accused counsel present)**
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 14.10.2024

14.10.2024 முதல் விசாரணை

நான் சென்னை மறைமலைநகரில் குடியிருந்து நானும் அ.சா.1 புருசோத்தமனும் பங்குதாரர்களாக இணைந்து பாரத் இன்டஸ்ரியல் கேஸ் ஏஜென்சியை நடத்தி வருகிறோம். எங்களது ஏஜென்சிக்கு ஹெச்.டி.எப்.சி வங்கி சேலையூர் கிளையில் வங்கிக்கணக்கு வைத்துள்ளோம்.

1) 13.09.2017ம் தேதி மேற்படி வங்கியில் தொழில் அபிவிருத்திக்காக ரூ.5 கோடி கடன் கேட்டு சென்றிருந்தோம். கடன் கேட்டு விண்ணப்பமும் கொடுத்திருந்தோம். 2, 3 நாட்கள் கழித்து அ.சா.1 புருசோத்தமனுக்கு சிவா பைனான்சிலிருந்து ஒருவர் பேசுவதாக கூறி குறைந்த வட்டிக்கு கடன் கொடுப்பதாகவும் உங்களுக்கு வேண்டுமென்றால் வாங்கிக்கொள்ளுங்கள் என்று கூறினார். அப்போது நானும் அ.சா.1 புருசோத்தமனுடன் எங்களது அலுவலகத்தில் தான் இருந்தோம்.

2) போனில் பேசிய நபர் நாங்கள் குன்னூரில் தான் உள்ளோம் என்றும் எங்களை நேரில் வந்து பார்த்து கடன் பெற்றுக்கொள்ளுமாறு கூறினார். மேலும் வங்கியை விட குறைவான வட்டிக்கு பணம் கொடுப்பதாகவும் கூறினார். எனவே 15.09.2017ம் தேதி நானும் மேற்படி புருசோத்தமனும் ஓட்டுநர் குமாரும் ஒரு காரில் சென்னையிலிருந்து குன்னூருக்கு கிளம்பி 16.09.2017ம் தேதி காலை 06.00 மணிக்கு குன்னூர்

ரயில்நிலையம் அருகில் வந்தோம். அன்று காலை 09.00 மணியளவில் எங்களிடம் போனில் பேசிய முரளி என்பவர் வந்து உபதலை என்ற ஊரக்கு கூட்டிச்சென்றார்.

3) அங்கு ஒரு கெஸ்ட்ஹவுசில் எங்களை உட்கார வைத்து பேசினார்கள். மேற்படி முரளி தன்னுடைய முதலாளி என்று பாஸ்கரன் என்பவரை அறிமுகம் செய்து வைத்தார். அந்த முரளி மற்றும் பாஸ்கரை தற்பொழுது பார்த்தாலும் என்னால் அடையாளம் காட்டமுடியும், (**1ம் எதிரி பாஸ்கரன், 2ம் எதிரி முரளி ஆகியோர் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகாததால் சாட்சியால் அவர்களை அடையாளம் காட்ட முடியவில்லை**) மேற்படி பாஸ்கரன் எங்களிடம் ரூ.5 கோடி கடனுக்கு 2 சதவீதம் பிராசசிங் பீஸாக ரூ.10 லட்சம் ரொக்கமாக வேண்டுமென்று கேட்டார். பின்னிட்டு நாங்கள் கிளம்பி சென்னை சென்றுவிட்டோம். மீண்டும் மேற்படி 2ம் எதிரி முரளி தான் தொடர்ந்து எங்களுக்கு போன் செய்து பேசிவந்தார்.

4) 10 நாள் கழித்து 28.09.2017ம் தேதி மேற்படி தொகையான ரூ.10 லட்சத்தை ரெடி செய்துவிட்டு நானும் அ.சா.1 புருசோத்தமன், டிரைவர் விஜயகுமார் ஆகியோர் கிளம்பி 29.09.2017ம் தேதி காலை சுமார் 06.30 மணியளவில் குன்னூர் வந்து சேர்ந்தோம். குன்னூர் ரயில்நிலையம் அருகில் வந்து நாங்கள் காத்திருந்தபோது முரளி வந்து எங்களை ஒரு கெஸ்ட்ஹவுசுக்கு அழைத்துச் சென்றார். அங்கு 1ம் எதிரி பாஸ்கரனும் அவருடன் 2 நபர்களும் இருந்தார்கள். அப்பொழுது பாஸ்கரன் தன்னிடம் ரூ.10 லட்சத்தை கொடுக்குமாறும் எங்களுடன் முரளியை அனுப்பி வைப்பதாகவும் அவர் வங்கிக்கு வந்து கடன்தொகையினை தங்களது பைனான்ஸ் கணக்கில் டெபாசிட் செய்து அதை எங்களது வங்கிக்கணக்கிற்கு மாற்றி தருவதாக சொன்னார்.

5) கெஸ்ட்ஹவுசுக்கு வெளியே செவரலட் டி.என்.66.2268 பதிவெண் கொண்ட கார் ஒன்று நின்றிருந்தது. அதன் டிக்கியை திறந்து அதற்குள்ளிருந்த பெட்டியில் 2000 ரூபாய் நோட்டுகள் அடுக்கி வைக்கப்பட்டிருப்பதை காட்டினார்கள். அந்த தொகையை தான் வங்கியில் டெபாசிட் செய்து எங்களது வங்கிக்கணக்கிற்கு மாற்றி தருவதாக சொன்னார்கள். எங்களுடன் மேற்படி முரளியை

காரில் அனுப்பி வைத்தார்கள். எங்களுடன் இன்னொரு காரும் வந்தது. அதிலும் சிலர் வந்தார்கள். வரும் வழியில் ஒரு ஹோட்டல் அருகே காரை முரளி நிறுத்தச்சொல்லி தான் சென்று ஆடிட்டரை அழைத்து வருவதாக கூறி அவர் சென்றுவிடடார். பின்னிட்டு அரைமணிநேரம் நாங்கள் காத்திருந்தும் முரளி வரவில்லை.

6) நாங்கள் அக்கம்பக்கம் தேடி பார்த்தோம். ஆனால் முரளியை காணவில்லை. எனவே நாங்கள் பணம் கொடுத்த அந்த கெஸ்ட்ஹவுசுக்கு சென்று பார்த்தோம். அங்கும் யாருமில்லை. கெஸ்ட்ஹவுசில் வேலை பார்க்கும் நபர்கள் மட்டும் அங்கு இருந்தார்கள். அவர்களிடம் விசாரித்தபோது மேற்படி நபர்கள் தங்களது கெஸ்ட்ஹவுசில் வந்து தங்கியிருந்துவிட்டு சென்றுவிட்டதாக கூறினார்கள். பின்னிட்டு எதிரிகள் எங்களை ஏமாற்றியதை தெரிந்துகொண்டு கொலக்கம்பை காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தோம். அன்றையதினம் எதிரிகள் ஒரு காரில் பணம் வைத்திருந்த பெட்டி மற்றும் காரை பார்த்தால் என்னால் அடையாளம் காட்டமுடியும். என்னிடம் காட்டப்படும் அ.சா.பொ.2 போட்டோவில் கண்டுள்ளது தான் அந்த கார் ஆகம். மேலும் அ.சா.பொ.1 பெட்டி தான் அந்த பெட்டி. வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u> - (**வாய்ப்பளித்தும் இல்லை**)

/ஒப்பம்/R.அப்துல் சலாம்

நீதித்துறை நடுவர், குன்னூர்.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, COONOOR
**Case No: CC.No.172/2023**
Prosecution witness- **PW.3**

| | | | |
|---|---|---|---|
| Name | : Vijayakumar | Caste | : |
| Father Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |
| Time | : 02:55 P.M. to 03:05 P.M. | | |

**(Accused present. Respective accused counsel present)**
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 14.10.2024

14.10.2024 முதல் விசாரணை

நான் செங்கல்பட்டு மாவட்டம் குருவன்மேட்டில் குடியிருந்து அ.சா.1 புருசோத்தமன், அ.சா.2 ஜெகதீசன் நடத்திவரும் கேஸ் கம்பெனியில் ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன்.

1) 15.09.2017ம் தேதி மேற்படி அ.சா.1, 2 ஆகியோர் என்னிடம் குன்னூர் செல்ல வேண்டுமென்று கூறினார்கள். அதன்படி நானும், மேற்படி புருசோத்தமன், ஜெகதீசன் ஆகியோர் இன்னோவா காரில் அன்றையதினம் மாலை சுமார் 07.00 மணியளவில் கிளம்பி 16.07.2017ம் தேதி காலை 05.00 மணிக்கு குன்னூர் ரயில்நிலையம் அருகில் வந்து காத்திருந்தோம். அங்கு முரளி என்பவர் வந்து சிறிது தூரத்திலுள்ள சிறிய வீடு போன்ற ஒரு இடத்திற்கு கூட்டிச்சென்றார். நான் காரிலேயே அமர்ந்திருந்தேன். மேற்படி புருசோத்தமன் மற்றும் ஜெகதீசன் ஆகியோர் உள்ளே சென்றார்கள்.

2) அவர்கள் பேசி முடித்துவிட்டு வந்ததும் அன்று காலை சுமார் 08.00 மணியளவில் நாங்கள் மீண்டும் சென்னைக்கு கிளம்பி சென்றுவிட்டோம். மீண்டும் 3 நாட்கள் கழித்து புருசோத்தமனும் ஜெகதீசனும் குன்னூர் போகவேண்டுமென்று கூறினார்கள். 26.09.2017ம் தேதி காலை சென்னையிலிருந்து மீண்டும் கிளம்பி நானும் புருசோத்தமன் ஜெகதீசன் ஆகியோர் குன்னூருக்கு 27.09.2017ம் தேதி காலை 08.00 மணிக்கு குன்னூர் ரயில்நிலையம் அருகில் வந்து நின்றுகொண்டிருந்தோம். காலை

09.00 மணியளவில் முரளி குன்னூர் ரயில்நிலையம் வந்து அக்சயா கார்டனுக்கு கூட்டிச்சென்றார். அப்போது எங்கள் உரிமையாளர்கள் சிகப்பாக குண்டாக இருந்த ஒரு நபரிடம் ரூ.10 லட்சத்தை கொடுத்தார்கள். மேற்படி முரளி மற்றும் அந்த சிவப்பாக குண்டாக இருந்த நபரை தற்போது பார்த்தாலும் எனக்கு அடையாளம் தெரியும். **(எதிரிகள் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகாததால் சாட்சியால் அவர்களை அடையாளம் காட்ட முடியவில்லை)** அப்போது முரளி பணம் ரெடியாகிவிட்டதென்றும் நீங்கள் சென்று பாருங்கள் என்றும் கூறினார். எங்கள் உரிமையாளர்கள் காரில் ஒரு பாக்சில் இருந்த பணத்தை பார்த்தார்கள். அப்போது நானும் அங்கு இருந்தேன்.

3) அங்கிருந்து கிளம்பி நானும் எனது உரிமையாளர்கள் மற்றும் மேற்படி முரளியும் காரில் சிறிது தூரம் சென்றோம். அப்போது மேற்படி முரளி ஆடிட்டரை பார்த்து வருவதாக சொல்லிவிட்டு காரிலிருந்து இறங்கி சென்றார். போனவர் திரும்பி வரவில்லை. மீண்டும் காரை எடுத்துக்கொண்டு நாங்கள் அக்சயா கார்டனுக்கு சென்றோம். அங்கு யாரும் இல்லை. அங்கிருந்தவர்களை விசாரித்தபோது மேற்படி நபர்கள் ஒருநாள் வாடகைக்கு இருந்ததாகவும் பின்னிட்டு சென்றுவிட்டதாகவும் கூறினார்கள். அதன்பிறகு நாங்கள் காவல்நிலையம் வந்து புருசோத்தமன் புகார் கொடுத்தார். வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை - (**வாய்ப்பளித்தும் இல்லை**)

/ஒப்பம்/R.அப்துல் சலாம்

நீதித்துறை நடுவர், குன்னூர்.